1970 செப்டம்பர் 7]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரசக்கற்பூரத் தைலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை எங்கே ஏற்பட இருக்கிறது? அதற்கு மூலதனம் எவ்வளவு தேவைப்படும்? ரசக்கற்பூரத்தைலம் என்னென்ன பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெட்ரோல் கெமிகல் காம்ப்ளெக்ஸ் மணலிக்கு அருகில் கிட்டத்தட்ட ரூ. 200 கோடியில் பெரிய திட்டம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. என்ஜினியர்ஸ் இண்டியா கம்பெனி தங்களுடைய ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே ஐ.ஸி.ஐ. கம்பெனி தங்களுடைய ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். இதற்கு நாப்தா கிராக்கர் என்று சொல்லப்படுகிற மூலத் தொழிற்சாலையை மட்டும் முதலில் தொடங்குவது. அதிலிருந்து வருகிற டவுன் ஸ்ட்ரீம், ஒவ்வொரு பொருளாக வரும்பொழுது, அந்தப் பொருள்களுக்கு பல தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். இதற்கு முக்கியமான மூலப்பொருள் நாப்தா நம்முடைய மெட்ராஸ் ரிபைனரியில் ஓரளவுக்குத்தான் கிடைக்கிறது. இது நாட்டில் பற்றாக்குறையாக இருக்கிறது என்ற ஒரு வாதம் மத்திய அரசினால் வைக்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் அதற்குப் பதில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், இந்த நாப்தாவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தாலும், எக்ஸ்போர்ட் ஓரியண்டெட் ஸ்கீம் என்ற முறையில் எவ்வளவு மூலப் பொருள் இறக்குமதி செய்கிறோமோ அவ்வளவு உற்பத்திப் பொருள், செய்பொருள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அடிப்படையிலே பெட்ரோ கெமிகல் காம்ப்ளெக்ஸ் திட்டத்தை சுமார் 200 கோடி ரூபாயில் நம்முடைய மாநில அரசிற்குத் தர வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதற்குப் பின்னால் விவரங்களை நாம் முடிவு செய்யலாம்.

குடகனாறு, நொய்யலாறு திட்டம்

* 276 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூருக்கு அருகில் உள்ள குடகனாறு, நொய்யலாறு திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. வை. சுவாமிநாதன் : இந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்ற அரசாங்கம் முயலவேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கரூருக்கு தெற்கு வடக்கில் பல ஆயிரக்கணக்கான நிலங்கள் சாகுபடிக்கு பயன்படுத்தக்கூடிய நிலை இருப்பதினால், இந்தத் திட்டத்தை எப்பொழுது தொடங்குவதற்கு ஆயத்தம் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு புதிய நீர்த் தேக்கத் திட்டம் போதுமான நீர் வாயில்களின்றி அத்தகைய ஒரு திட்டத்தில் ஏற்படும் செலவுக்கேற்ற பயன்களின்றி இருந்தால் அதிகப்பயன்களைப் பெற குடகனாறு திட்டத்தின்கீழ் மதுரை, திருச்சி மாவட்டங்களில் உள்ள ஏரி குளங்களையும் அணைக்கட்டுக்களையும் மேம்படுத்தல் என்று குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தலைமை பொறியாளர் (நீர்ப்பாசனம்) கேட்டுக் கொள்ளப்பட்டார். நான்கு திட்டங்கள் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறை

வேற்றப்பட்டு வருகின்றன. மூன்று திட்டங்கள் அரசின் ஆய்வில் உள்ளன. குடகனாறு கீழ்ப் பகுதியிலுள்ள வல்லியணைப் பகுதிகளுக்கு பாசன வசதி செய்வது பற்றி மறு பரிசீலனை செய்யுமாறு தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

பெரியாறு அபிவிருத்தித் திட்டம்.

*** 277 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு அபிவிருத்தித் திட்டத்துக்காக போடப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது அதற்கான துவக்க வேலைகள் நடைபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) 1966-67-ஆம் வருடத்தில் பெரியாறு அபிவிருத்தி திட்டத்திற்காக போடப்பட்ட மதிப்பீடு ரூபாய் 4 கோடியே 25 லட்சம்.

(இ) இந்தத் திட்டம் மத்திய நீர் மின் விசைக் குழுவின் ஒப்புதலும் அரசின் அனுமதிப்பும் கிடைத்தபின் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, பெரியாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால், அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் யாவை? குறிப்பாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தினசரி வீணாகிற 100 கன அடித் தண்ணீரை மிதப்படுத்தி, 10,000 ஏக்கர் வரை புதிய பாசனம் செய்யலாம் என்று திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே? இதை வெகு விரைவாக நிறைவேற்ற மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த ஆண்டு வேலை துவக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். வைகை ஆற்றின் இடது பக்கத்தில் வைகை அணையிலிருந்து பேரணை பொறி மதகிற்கு காரை பூசப் பட்ட, பதிய இணைப்புக் கால்வாய் ஒன்று வெட்டுவதற்கு முதல் பகுதி வகை செய்கிறது. தற்போது வைகை ஆற்றில் மணற் படுகையில் நீர் கொண்டு செல்கையில் சுமார், 1,350 மில்லியன் கன அடி நீர் விரயமாவது இந்த ஏற் பாட்டினால் தவிர்க்கப்பட்டு, அந்த நீர் 9,500 ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசனமளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது, பெரியாறு தலைக் கால்வாய், அதன் நான்கு பெரிய கிளைக் கால்வாய்களுக்கும் காரை பூசுதல், மதகுகள், பொறி மதகுகள் முதலியவற்றிற்கு மேம்பாடுகள் செய்தல் ஆகிய திட்டம். இதன் மூலம் 21,500 ஏக்கருக்குப் பாசனமளிக்க இயலும். மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். கடைசியாக தலைமைப் பொறியாளரின் தொடக்க குறிப்புகளுக்காக அறிக்கை மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவுக்கு 18-4-1970-ல் அனுப்பப்பட்டது. மத்திய நீர் மின்விசைக் குழுவின் அனுமதி பெற்றவுடன் வேலை துவக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு அபிவிருத்தித் திட்டத்தை ஒட்டியே மதுரையில் புதிய அணைக் கட்டு ஒன்று நான்கு கோடி ரூபாயில் அமைக்க பரிசீலனையில் இருக்கிறதா? அதன் மீது முடிவு எப்பொழுது எடுக்கப்படும்?